**MAY 2022**

# U/ID 33218/UCT4C/ UCL5A

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும்
30 சொற்களில் விடை தருக.

1. பிரபந்தம் சிறு குறிப்பு வரைக.

2. பரணியின் இலக்கணத்தைக் கூறுக.

3. முத்தொள்ளாயிரம் பாடல் அமைப்பைக் கூறுக.

4. கலம்பகம் என்றால் என்ன?

5. நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

6. கலிங்கத்துப் பரணியின் பிரிவுகள் யாவை?

7. செயங்கொண்டார் எழுதிய மற்றொரு நூல் யாது?

8. தூது விளக்கம் தருக.

9. தமிழின் பெருமைகளைக் கூறியவர் யாவர்?

10. பிள்ளைத் தமிழின் பருவங்கள் யாவை?

11. ‘காவடிச் சிந்து’ என்பது யாது?

12. பிள்ளைத் தமிழின் வேறு பெயர்களைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. சேர மன்னர்களின் போர்ச் சிறப்பை விளக்குக.

14. கலம்பக உறுப்புகள் யாவை? அவற்றை விளக்குக.

15. கலிங்கத்துப் பரணியில், களத்தின் சிறப்பை விளக்குக.

16. தூதுக்குரிய பொருள்களாக, தமிழ்விடு தூது கூறுவனவற்றை எடுத்துக் கூறுக.

17. கழுகுமலை முருகன் கோவில் அமைப்பை அண்ணாமலையார் எங்ஙனம் வருணிக்கிறார்?

18. நந்திவர்மனின் பெருமைகளை, கலம்பகம் வழி நின்று நிறுவுக.

19. தமிழ்மொழியின் பிறப்பை, தமிழ்விடு தூது எவ்வாறு கூறுகின்றது?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. முத்தொள்ளாயிரத்தில் காணலாகும் பண்பாட்டுச் செய்திகளை எடுத்துரைக்க.

21. நந்திவர்மனின் வெற்றிச் சிறப்பை விவரிக்க.

22. கலிங்கப் போர்க்களத்தை பேய்கள் காளிக்கு காட்டும் விதத்தை விவரி.

23. தமிழ்மொழியின் பிறப்பும் வளர்ப்பும் குறித்துக் கட்டுரை வரைக.

24. 'காவடிச் சிந்து' – ஒரு வழி நடைப் பாடல் என்பதை நிறுவுக.

———————